



# பாலியர் நேசன்.

நானே நல்ல மேய்ப்பன்.

குழந்தைகளை என்னிடத்தில் வரவிடுங்கள், தடைபண்ணாதிருங்கள்.

௩ம் புத்தகம்.] யாழ்ப்பாணம் ௲௮௱௬௰௬ம் ௵ வைகாசி ௴. இதன்விலை வருஷம் ஒன்றுக்கு, அரை ரூபாய். [சங்கியை ௫.


## பத்திரத்தின் விலை.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு பிரதிவாங்குவார்க்குவிலை | | | சி. | ௧ |
| ஒரேமுறையில் ௧௦ | " | " | " | ௯ |
| ௨௦ | " | " | " | ௧௭ |
| ௨௫ | " | " | " | ௨௧ |
| ௫௦ | " | " | " | ௪௦ |
| ௧௦௦ | " | " | " | ௭௫ |

தபாற்செலவு பிறம்பாய்வரும்.

## SUBSCRIPTIONS.

| 1866. | £ | s. | d. |
|---|---|---|---|
| Batticotta Y. C. A. | | 13 | 4½ |
| Mr. Jeremiah | | 2 | 0 |
| " S. Williams for 1865 | | 1 | 0 |
| " C. T. Mills | | 1 | 6 |
| " AMNNT. Vengadsamy | | 2 | 0 |

## வைகாசி மாதம்.

வைகாசிமாதமாகிய மே என்னும் இங்கிலிஷ் சொல் மேயியு (Maius) என்னும் லத்தீன் சொல்மூலத்திலிருந்துபிறந்தது. இம்மாசம் சகலருக்குஞ் சந்தோஷமாகவிருக்கும். எங்கெங்கே பார்த்தாலும் அங்கங்கெல்லாம் விவாகச் சடங்குகள் நிறைவேறுவதும் சனங்கள் தங்கள் தொழில்துறைகளில் முயற்சியுள்ளவர்களுமாயிருப்பார்கள். சித்திரை வைகாசியாகிய இரண்டுமாசங்களும் இளவேனிற்காலமென இந்ததேசத்தார் சொல்லுவார்கள். துன்பதுயரமில்லாமல் சகலரும் சந்தோஷமுள்ளவர்களாகவிருப்பார்கள். இம்மாதத்தில் அஞ்ஞானக் கோவில்களில் விழாக்கொண்டாடுவார்கள். வைகாசியில் வரும் விசாக நட்சத்திரம் விசேஷித்ததெனவவர் எண்ணுகிறார்கள். அன்றையிற்றினமேகேர்சோழகம் வீசத்துவங்குகிறதென்பார்கள்.

பிள்ளைகளே, நற்காலத்தை நமக்குக் கொடுக்கும் வல்ல கடவுளை நாம் துதித்து அவரால்வரும் ஆசிர்வாதங்களைத் தேடுவதே நமது கடமை. அவர் தந்த நன்மையை நாம் தீமையாக மாற்றாதபடி எச்சரிக்கையுடன் நடப்போமாக.

## "சுபாவ அன்பில்லாதவர்கள்."

அப்போஸ்தலனாகிய பவுல் ஏறக்குறைய, ௲௮ வருஷங்களுக்குமுன் எப்படிக்கொத்தவர்கள் அஞ்ஞானிகளென்று உரோமருக்குஎழுதின நிருபம் முதலாம் அதிகாரத்திற் கடைசிப்பகுதியிற் சொல்லியிருப்பதைப் பிள்ளைகளே வாசித்திருப்பீர்கள். அதிற் சொல்லியிருக்கும் பல இலட்சணங்களுக்குள் "சுபாவ அன்பில்லாதவர்கள்" என்பதும் ஒன்று. "சுபாவ அன்பில்லாதவர்கள்" என்பது பெற்றோர் பிள்ளைகளில் வைக்கவேண்டியதும், பிள்ளைகள் பெற்றோரில் வைக்கவேண்டியதுமான இயல்பான அன்பில்லாமலிருப்பதே. இவ்விரு தன்மையையும் விளக்கும் இரண்டு திஷ்டாந்தங்களை ஒரு குருவானவர் எழுதுகிறார். எப்படியெனில்,

எனது வீட்டின் கதவின் பக்கலாக இரண்டு ஸ்திரிகள் உட்கார்ந்திருந்தார்கள். ஒருத்தி விருத்தாப்பியக் கோலமுள்ளவளும் மற்றவள் புஷ்டியான தேகமுள்ள இளம்பெண்ணுமாக விருந்தாள். அவர்களை நோக்கி, என்ன காரியமென்று கேட்டவிடத்தில் இளம்பெண்ணானவள் ஐயா, இந்த விருத்தை அந்தரித்தவளாக இருக்கிறாள், இவளுக்கு வேறுதக்கவொருவருமில்லை, இவள் வேலைசெய்து சீவனம்பண்ணுவதற்கு பெலனில்லை; ஒடித்திரிந்து பிச்சையெடுக்கவும் நடக்கவும் மாட்டாதவளாகவிருப்பதால் இக்கிழவியை உமது தருமசாலையில் சேர்த்துக்கொள்ளுமென்றாள். இவ்வார்த்தைகளைச் சொல்லிய இளம்பெண்ணை நோக்கி, நீயாரென்று குருவானவர் கேட்க, நான் இவள்வீட்டுக்கு அண்டைவீட்டுக்காரி, வழிகாட்டும்படிக்காகவே இவளோடு கூடவந்தேனென்றாள். குருவானவர் மனதிரங்கி தருமசாலையில் விருத்தையை சேர்த்துக்கொண்டார்.

சிலநாட்களின்பின் இக்கிழவியைக் கூட்டிக்கொண்டுவந்த அந்த இளம்பெண் கிழவியுடைய சொந்த மகளென்றும், விவாகம்முடித்தவளென்றுங் குருவானவர் அறிந்து, தருமசாலையின் ஒழுங்குக்கு விரோதமாக இவளைச்சேர்த்துப்போட்டதென்று விசனப்பட்டுக் கிழவியிடஞ்சென்று இப்பொழுதே இவ்விடத்தைவிட்டு உன் வீட்டுக்குப்போய் உன் மகளுடன் வாசம்பண்ணென்று சொன்னார். உடனே கிழவி அவருடைய பாதத்தில் விழுந்து சொன்னது; ஐயாவே, எனது மருமகனும் மகளும் எனக்குப் போசனத்துக்கு ஒன்றுந்தராமற் பட்டினியே போட்டு என்னைப் படலைக்கப்பால் துரத்திவிட்டார்கள். இனி நான் அங்கேபோனாற் பசியினாற் செத்துப்போவேனென்றாள்.

பிள்ளைகளே, இச்சரித்திரம் சுபாவ அன்பு இல்லாத தன்மையைக் காட்டவில்லையா? இப்படிக்கொத்த குணத்தோர் அஞ்ஞானிகளென்பதற்குச் சந்தேகமில்லை. நரைத்துத் தளர்ந்து எழும்பி உலாவித்திரியக் கூடாதகாலத்தில் தன் மாதாவைக் காப்பாற்றித் தான் உண்ணாதிருந்தாலும் தன் போசனத்தைக் கொடுப்பதற்குப் பதில் தன் மாதாவை வெளியே துரத்திவிட்டது பசாசின்குணமல்லவா. இதுமாத்திரமல்ல மாதாமார் பிள்ளைகளை எப்படி நடத்துகிறார்கள் என்பதைப்பற்றியும் ஒருமெய்யான சரித்திரஞ் சொல்லுகிறோம். கேளுங்கள்,

பிள்ளைகள் தங்கள் மாதாமாரை மறந்துவிடக்கூடும், ஆனால் மாதாமாரோ தங்கள் பிள்ளைகளை மறந்துவிடமாட்டார்கள் என்பது ஒரு நிசவார்த்தையாகவிருந்தும் அதுவும் அப்படியல்ல. மாதாமாரும் "சுபாவ அன்பில்லாதவர்கள்."

ஒருமனுஷன் ஒரு குருவானவருக்குச் சொன்னது, நான் அந்தக் கிராமத்திற்குப் போகையில் சதிரக்கள்ளிகள் நிறைந்த ஒரு பற்றைக்குள் பிள்ளைகள் வெம்பி அழுகிற சத்தம்போல ஒரு சத்தத்தைக் கேட்டு அவ்விடத்திற் சென்று பார்த்தபொழுது முள்ளுக்களுக்குள் கிடந்து வாதைப்படும் ஒருபிள்ளையைக் கண்டு அப்பற்றைக்குள் கிடப்பதால் பெரிது பிரயாசமாகவிருந்தது. அடுத்த கிராமத்திற்குப் போய் ஒரு வெட்டுக்கத்தியும் எடுத்துக்கொண்டு ஒரு மனுஷனையுங் கூட்டிக்கொண்டு வந்தேன். சதிரக்கள்ளிப் பற்றையை வெட்டி மிகு வருத்தத்துடன் பிள்ளையை எடுத்தோம். பிள்ளை முள்ளுக்களால் கீறப்பட்டு இரத்தம் வடிந்துகொண்டேயிருந்தது. உடனே பால்தேடிக்கொடுத்துஞ் சற்றுநேரத்தால் பிள்ளை இறந்துவிட்டது.

பாருங்கள், இதைப்பெற்றதாயின் மனம் எப்படிக்கொத்தது! கல்லும் உருகுமே! இவள் மனதுக்கு எதை ஒப்பிடலாம்! தன் உதரக்கனியை என்னசெய்தாள்! ஆ! பாவி! கொடும்பாவி! ஐயோ! இவளுக்கு எப்படிப்பட்ட ஆக்கினையைத் தேவன் விதிப்பாரோ! இவள் "சுபாவ அன்பில்லாதவள்" அல்லவா. தேவன் சொல்வதைக் கேளுங்கள். "ஸ்திரியானவள் தன் கருப்பத்தின் பிள்ளைக்கிரங்காமல் தனது குழந்தையை மறப்பாளா? அவர்கள் மறக்கவுங்கூடும். நானோ உன்னை மறவேன்" என்று சொல்வதால் உங்கள் தாய்மார் உங்களை மறந்தாலும் தேவன் ஒருபொழுதும் மறவாரென்பதைப் பிள்ளைகளே நினைவுகூருங்கள்.

## வயசுவிழுங்கி.

ஒருநாட் சாயந்தரம் நாலுமணிவேளையில் உலாத்தும்படி கொஞ்சத்தூரம் நடந்தேன். அக்கோரத்தில் குறுகியதோற்றமும், வெளிறியநிறமும், கசிந்த சொக்கும், மூன்றுகாலாட்டமும், பெலனற்ற கைகளுமுடையவராய் ஒருவர் வரக்கண்டேன். நான் ஆச்சரியத்துடன் அவரைக் கிட்டி ஓய்! பெரியவரே, எங்கிருந்து வருகிறீர்? எங்கேபோகிறீர்? என்று வினவியபின் வயதென்னவென்றுங் கேட்டேன். அதற்கவர் நான் வயதுசொல்ல நீ நம்பமாட்டாய். ஆனாலும் கேள், எனக்கு இப்பொழுது இருபதுவயது. வாலிபத்தில் வயோதிபனானேன் என்றார். இதைக்கேட்ட நான் முன்னையிலும் மும்மடங்கதிசயத்துடன் நம்பிக்கையற்றவனாய் ஓ! இதென்ன ஆச்சரியம். இருபதுவயதிற் கிழவனானீரா? ஏது இவ்வளவு சீக்கிரங் குறுகியது. உம்முடைய பெயரென்னவென்க, என்னூரார் பொல்லாதவர்கள், அயலார் கெட்டவர்கள், சிநேகிதர் துர்த்தர், நானுஞ் சிறுபராயந்தொடங்கி இவ்வித சிநேகிதரை என் தோழராய்த் தெரிந்துகொண்டபடியால், அவர்களைப் பிரியப்படுத்தி எனதிச்சையைத் திருத்திப்படுத்த விரும்பிச் சகலவித துர்க்கிருத்தியங்களுக்கும் என்னை ஒப்பித்தேன், என் வயசையும் விழுங்கினேன். ஆதலால்தான் வயசுவிழுங்கியென்னும் பேரால் இப்பொழுதும் அழைக்கப்படுகிறேன், அது எனக்கே தகும் என்றார். இதையறிந்துகொண்டு அகாத சந்தோஷம் எப்படியெ

ணை அறியவிரும்பிப் பின்னும் அவருடன் சம்பாஷித்தேன். அதற்கு அம்மனுஷன் உக்கினமரத்திற் இலையாவது, தளிராவது, பூவாவது ஏது? உயிரிருந்தாலல்லவா இவைகளிருக்கும். அதுபோலவே நானும் உக்கிப்போனேன். செத்தின் பத்திற் பிரியப்பட்டேன். இப்பொழுதோ "செத்தின்பஞ் சென்னீரதாயினுமஃதுற்றார் மற்றின்பம் யாவையுங் கைவிடுவர்" என்ற நீதிநெறிப்படி முடிந்தது என்றார்.

அருமையான பாலியரே, இதனால் நீங்களுஞ் சில போதனையைப் பெற்றுக்கொள்ளலாம். விசேஷமாய் உங்கள் பாலியப்பிராயமாகிய இவ்வேளையில் நீங்கள் சிநேகிதரைத் தெரிந்துகொள்ளத் துவங்குகிறீர்கள். சன்மார்க்கரும், தேவனுக்கடாதவைகளை நினைக்கவும், பேசவும், செய்யவும் பயப்படுகிறவர்களுமானவர்களைத் தெரிந்துகொள்ளுங்கள். பாவஞ்செய்வதிற் துரிதரும், துர்த்தருமாயிருக்கிறவர்களைத் தோழமைகொள்வது பிற்காலத்திற் துக்கத்திற்கிடமாயிருக்கும். துர்ச்சைகளைத் தூரமாய்த் தள்ளவேண்டும். இவ்வுலக இன்பம், தேவதயவு, மனச்சந்தோஷம் என்பவைகளை இழந்து இருதுவயசிற் கிழவராகாதிருங்கள். துக்கமும், வெட்கமுமுள்ள வயசுகிழங்கி என்னும் பெயரால் அழைக்கப்படாமல் தப்பிக்கொள்ளப்பாருங்கள்.

இங்ஙனம், W. S. T.

## விடைகள்வேண்டும் வினாக்கள்.

பிள்ளைகள் தங்கள் விவேகத்தைத் தீட்டும்படிக்குச் சில வினாக்களைப் பின்னால்வரைகிறோம். அவர்கள் அதற்கு விடைகளைக் கண்டு நேசனுக்கு எழுதியனுப்பினாற் பிரசாஞ்செய்வோம்.

௧. சூரியனைத் தன் கண்ணால் இமைவெட்டாமல் நெட்டி உற்றுப்பார்த்து நிற்கக் கூடிய பட்சி என்ன?

௨. ஒரு மைல் தூரத்திற்கு அப்பாலிருக்குந் தண்ணீரை துருப்பிடித்து மணத்தறியும் மிருகமென்ன?

௩. எவ்வகைப்பட்ட மிருகங்கள அதிபிரயோசனமற்றவைகள்?

௪. ஒவ்வொரு காலிலும் இரண்டு பெருவிரலுள்ள பட்சி என்ன?

௫. முக்கோண வடிவமாகப் பறக்கும் பட்சிக்கூட்டங்கள் என்ன?

௬. மும்முரமாகக் காற்றடிக்கும்பொழுது அவை என்ன வடிவமாகப் பறக்கின்றன?

௭. எவ்வகை மிருகங்கள் தீமைசெய்யாது?

௮. ஒருபொழுதும் தண்ணீர்த்தாகமற்ற மிருகம் என்ன?

௯. நாற்பத்திரண்டு பல்லுள்ள மிருகம் என்ன?

௰. நாற்பத்துநாலு பல்லுள்ள மிருகமென்ன?



வேங்கைப்புலி.

இராணுவத்தைச்சேர்ந்த ஒரு யுத்தவீரன் தோட்டத்தில் உட்கார்ந்திருக்கையில் திடுகூறாக ஒரு வேங்கை அவ்விடத்தில்வர அவன் சங்காவியமாக விழுந்தான். உடனே அவன் அசைவின்றிக் கிடப்பதினால் புலி அவன்மேற் பாயாமற் தாமதித்து நின்று பின்பு உறுமிப் பதுங்கி அவன்மேற்பாய எத்தனிக்கையில் தான் அணியும் போர்ச்சேவகத்துக்குரிய தொப்பியை எடுத்து அதற்குமுன்போட்டுத் தன்னாலானமட்டுக்குப் பெருங்குரலெடுத்து ஆர்ப்பரித்தான். இடிமுழக்கத்துக்குச் சமமான அவன் சத்தமும் அவன் செய்த செய்கையும் அதற்கு அச்சத்தைக் கொடுத்ததால் அடுத்த காட்டுக்குள் ஓடிவிட்டது.

சீனதேசத்திலிருந்து இங்கிலாந்திற்குக் கப்பலில் ஒரு புலிகொண்டுபோனார்கள். அது கப்பலிலிருந்தவர்களுடன் நடமாடிப் பழகிக்கொண்டதினால் பூனைக்குட்டியுடன் சாவகாசம்பண்ணுவதுபோல எவரும் அதினுடன் கொண்டாட்டங் கொள்ளுவார்கள். கப்பலாட்களுடன் கூடப் படுத்துக்கொள்ளும். அது நீட்டிநிமிர்ந்து கிடக்கையில் கப்பற்காரர் அதின் முதுகைத் தங்கள் தலையணையாகக் கொள்வார்கள். இப்படி அவர்கள் செய்வதால் அவர்கள் தீன்களைப் பலமுறைகளிலும் களவாக எடுத்துத்தின்னும். ஒருநாள் கப்பலிலிருந்த தச்சனுடைய தீனைக் களவெடுத்துத் தின்கையில், அதின் வாய்க்குள்ளிருந்த தீனை அவன் கையைவைத்துத் தோண்டியெடுத்துப் பின்பு அதின் மூஞ்சையில் நாய்க்கு அடிப்பதுபோற் கையால் அடித்தான். அது பொறுமையுடன் அடிகளைப் பட்டுக்கொண்டது. கப்பலிலிருந்த நாயுடன் சந்தோஷமாக விளையாடும். அதைக் கப்பலிலேற்றினபோது ஒன்றரைமாதக் குட்டியாயிருந்தது.

புலியின் பெலம் மிகவும் ஆச்சரியத்துக்கிடமானது. அது எவ்வகைப்பட்ட பாரியான மிருகத்தையும் தனது முதுகின்மேற்றானே தூக்கிப்போட்டுக்கொண்டுபோம். ஆயிரம் இறுத்தல் நிறைகொண்ட ஒரு எருமையை ஒரு புலி தன் தோளின்மேற் போட்டுக்கொண்டு தன் பளைக்குச் சென்றது என்றும், இன்னும் ஒரு புலி ஒரு எருதின் தோட்பட்டையைத் தன் நகத்தினால் ஒரு பாய்ச்சலுடன் கீழே விழுத்தினதென்றுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. மேற்சொல்லிய புலிக்குட்டி ஒருமுறை பச்சை இறைச்சியைத் தின்றதின்பின் தனது காட்டுக்குணத்தைக் காட்டிக் காட்டுக்குட் சென்றுவிட்டது.

இன்னும் ஒருபுலி கற்குத்தாவிலிருந்து இங்கிலாந்துக்குக் கொண்டுபோகப்பட்டது. அது கப்பலிற் போகையில் சகலருடனுஞ் சேர்ந்து செறிந்திருந்தது. அதைக்கொண்டு போனவன் அதைவிட்டுப் பிரிந்ததின்மேல் தனது மூர்க்கக் குணத்தைக் காட்டியிருந்தது. அ[illegible] கப்பலிலிருந்து வந்தவனொருவன் அதைப்பார்க்கவேண்டுமென்று விரும்பி, ஒருநாள் அவ்விடத்திற் போனவிடத்தில் சந்தோஷத்துடன் அவனை நக்கி அவனுடன் விளையாடி[illegible] அவன் அதைவிட்டுப் பிரிந்தவுடன் உறுமி ஆரவாரம்பண்ணின்றது.

## நிமித்தசாஸ்திரப் புத்தகம்.

மூன்று பிள்ளைகள் ஆற்றில் நீந்தி விளையாடப்போகையில் ஒரு பிள்ளை என் பிற்காலநடபடியைப்பற்றிச் சொல்லும் நிமித்தசாஸ்திரப் புத்தகம் எனக்கொன்று கிடைத்தால்நல்லது, அப்படிக்கொத்த புத்தகமொன்றைக் கொள்ளும்படி தேடியுங் கிட்டவில்லையே என்றான். அப்பொழுது ஒருவன் தன்னிடத்திலிருக்கிறதென்றான். அப்படியா ஏன் நீ இதை முன் எனக்குச் சொல்லவில்லை அது எங்கேயென்றான். அதற்கு அவன் கடையிலிருக்கிறதென்க, மூன்றாம்பிள்ளையானவன் இனிமேல் எனக்கு நடக்குங் காரியங்களையும் அது சொல்லுமாவென்றான். ஆமென்க, அது உனக்கு எப்படித்தெரியும் நீ வெகுநாளாகச் சீவித்தவனல்லவே, நேற்றுப்பிறந்த உனக்கு பிற்காரியங்களை அந்தப் புத்தகம் சொல்லுமென்று எப்படி அறிவாயென்றான். ஆ! அது வெகுநாளையிற் புத்தகம், எனது பாட்டன் அதினால் தன் பிற்காரியங்களை அறிந்தார், அதின்பின் என் பிதாவசமிருந்து சரியாக அவருடைய பிற்காரியங்களை அது சொல்லிற்று. அது சொன்னபடியே சகலமும் நிறைவேறினதென்றான். அவ்வேளையில் ஒரு பையன் அது எல்லாருக்கும் முக்கியபுத்தகமாயிருக்கிறது. அது என்னவிலை. நீ ஏன் அந்தப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு குறிசொல்லிச் சம்பாதியாமலிருக்கிறாய் என்று கேட்க, நான் அதைக் கொண்டுதிரிந்து சொன்னாலும் என்னை ஒருவரும் நம்பாரென்றான். மற்றஇருவரும் அதைதங்களுக்குக் காட்டச்சொல்லிக் கேட்க இராத்திரிக்குக் கடைக்கு வாருங்கள், கதவடைக்கிற நேரம் வந்தாற் காணலாமென்றான். ஒருவன் அதை எனக்கு விற்றுப்போடு என்க, இல்லை என்னுடையதைத் தரமாட்டேன். ஆனால் நான் வாங்கின இடத்தில் நீங்களும் வாங்கலாமென்றான். மற்றவன் நல்லது எங்கள் அதிட்டம் எப்படியென்று பார்ப்போமென்று சொல்லிக்கொண்டு போய் அந்திநேரமாகிக் கடைகள் பூட்டப்படும் நேரத்தில் நிமித்தசாத்திரப் புத்தகம் வைத்திருக்கும் பிள்ளையின் கடைக்குப் போனார்கள். அந்தப் பிள்ளை இவர்களைக் கண்டவுடன் சலாஞ்செய்து உட்கடைக்குள் கொண்டுபோய் ஆசனங்கொடுத்து உட்காரவைத்து வெளிச்சமுங் கொழுத்தி பீடத்தின்மேல் வைத்துவிட்டு அச்சறுக்கையுள்ள ஒரு பெட்டியைத் திறந்து புத்தகத்தையெடுத்துக்கொண்டுவந்து இதுதான் நமது பிற் காரியங்களைக் குறித்துச் சொல்லும் புத்தகமென்று வணக்கமாகச் சொன்னான். மற்றிரு பிள்ளைகளும் மிகவுங் கூர்மையாகக் கவனித்ததின்பின் ஒருவன் இது வேத புத்தகமென்று கீழ்க் குரலாற் சொன்னான். புத்தகமுடையவன் இதுதான் என் பிதாவின் நிமித்தசாத்திரப் புத்தகம். இதில் நாம் செல்லவேண்டிய இருவழிகளுண்டென்றும், எங்கள்பின்னிலைமை அசந்தோஷமோ சந்தோஷமோவென்றும் எங்களை ஏய்க்காமல் நாம் நம்பிக்கையோடே மரணத்தின்பின் செல்லும் இடத்தைக் காட்டும் தேவசாஸ்திரப் புத்தகம் சத்தியவேதமே என்றான்.

பிள்ளைகளே, இவ்வூரில் அநேகர் சாதகம் பஞ்சபட்சிநூல் உள்ளமுடையான் முதலிய மனுஷர் கட்டிய சாத்திரங்களை மெய்யென்று நம்பி மோசம்போகிறார்கள். தேவனே அன்றி உங்கள் பிற்காரியங்களைச்சொல்லக்கூடிய வல்லவனர். இந்நாட்களில் நெல்லு முதலிய தானியங்களை வாங்கும்படி அநேக தவசிகள், சாஸ்திரிகளைக் காணலாம். அவர்கள் சொல்வது உள்ளதல்ல. அவர்களை நம்பி மோசம்போகாதே

யுங்கள். சாதகங்களில் இன்ன இடத்தில் இன்னகோள்நிற்பதால் பிள்ளைக்கு பிணி, சஞ்சலம், வெப்பு ருடு உண்டாகுமென்றும், மரபடி அக்கனத்தில் இன்னநிலைசயாக இருப்பதினால் பிள்ளைக்குச் சரீரசுகம் கல்விப்பேறு தனதானியசம்பத்தென்றெழுதுகிறான். எதை நம்பலாம்? பிணிவந்தால் சாதகம் சரியென்றுசொல்லி மற்றப் பகுதியைப் பாராமல் விடுகிறீர்கள். இரண்டையும் பார்த்தால் சாதகம் கணித்தது வெகு குட்சமென்று காண்பீர்கள். ஆ! தேவவார்த்தை நம்புங்கள்.



## திராட்சத்தோட்டமும் கூலியாட்களும்.

பிள்ளைகளே,

மேலே நீங்கள் காண்கிற இந்தப் படம் என்னத்தைக் காட்டுகின்றது. பாருங்கள், படத்தின் கிழக்குப்பக்கத்தில், ஒரு மனுஷன், தலையில் தலைப்பாகைகட்டி, கல்லாய் உடுத்துக்கொண்டுநின்று, தன் கையினால் ஏதோ எடுத்துத் தனக்குமுன் நிற்கிறவர்களுக்குக் கொடுக்கிறார். அவருக்குப் பிறகாலே, ஒரு பெரியவீடு இருக்கின்றது. படத்தின் மேற்குப்பக்கத்திற் சிலமனிதர் நின்று அவரிடம் ஏதோ வாங்குகிறார்கள். அவர்களுக்கு வடக்குப்பக்கமாயொரு தோட்டமிருக்கிறதுபோற் காணுது. இந்த ஆட்கள் அங்கே தெரிகிற அந்தத் தோட்டத்தில் வேலைசெய்துமுடித்து, வந்து தங்கள் கூலியை வாங்குகிறார்கள்.

பிள்ளைகளே, இதுதான் யேசுக்கிறிஸ்து பூமியிலிருக்கையில், பரலோக இராச்சியத்தின் மறைபொருளை வெளிப்படுத்தும்படி எடுத்துப் பேசின உவமைகளிலொன்றாகிய திராட்சத்தோட்டத்தில் வேலைசெய்த கூலியாட்களைக்குறித்த உவமையைக் காட்டியபடம். (மத். ௨௦: ௧-௧௬.) இந்த உவமையிற் சொல்லப்பட்டிருக்கிற தோட்டமென்பது, கர்த்தருடைய திருச்சபை. திருச்சபையில் எப்படிப்பட்டவர்களும், சோம்பராயிராமல், தங்களால் ஆனமட்டும் பிரயாசப்பட வேண்டியது. இந்தத் திராட்சத்தோட்டத்தில் வேலைசெய்யும்படிக்கு நாமொவ்வொருவரும், அழைக்கப்பட்டிருக்கிறோம், எசமான், நாளின் வித்தியாசமான நேரங்களில் கூலிக்காரரை அழைத்து வேலைசெய்வித்தது போல, தேவனும், வித்தியாசமான வயதிலுங் காலத்திலும், இரட்சகரை விசுவாசிக்கவும், அவரைப் பின்பற்றித் தமக்கு ஊழியஞ்செய்யும்படியாகவும், தமது ஆவியினால் நெருக்கி ஏவுகிறார். சிறுபிள்ளைகளாகிய உங்களையுந் தமக்கு ஊழியஞ் செய்யும்படி அழைக்கிறார். சாமுவேல், ஒபதியா, யோஷியா, தீமோத்தேயு முதலானவர்களை, அவர்கள் மிகவுஞ் சிறுவராயிருந்தபோது தமக்கு ஊழியஞ்செய்யும்படி அழைத்தார். அருமையான பாலியரே, உங்களையும், என் மகனே, என் மகனே, நீ என் சோம்புத்தனமாயிருக்கிறாய், என் சபையென்னுந் தோட்டத்தில்வந்து வேலைசெய்யென்று அழைக்கிறார். உங்களை மாத்திரமல்ல, வாலிபரையும், வயோதிபரையும், செல்வரையுந், தரித்திரரையும், எல்லோரையும் அழைக்கிறார். எப்படி அழைக்கிறார்? தமது வாக்கைக்கொண்டும், போதகர், உபதேசிமாரைக்கொண்டும், உபத்திரவத்தின் வழியாயும், பலமுழுதும் நீங்கள் வீணாய் நிற்கிறதென்ன? என் திராட்சத்தோட்டத்திற் போய் வேலைசெய்யுங்கள், நியாயமானபடி நான் உங்களுக்குக் கூலிதருவேனென்று, அந்த எசமான் கூலிக்காரரை அழைத்ததுபோலவே, தேவனும், உங்களை அழைக்கிறார். திராட்சத்தோட்டத்து எசமான், முன்பு வேலைக்கு வந்தவர்களுக்கும், பின்பு வேலைக்குவந்தவர்களுக்கும், சரிசமமாய்க் கூலிகொடுத்ததுபோலத் தேவனுந் தமது ஊழியத்திலேற்பட்டுச் சரியாய் நடப்பவர்களுக்குத் தமது வாக்குத்தத்தத்தின்படியே ஆசீர்வாதத்தை அருள்வார். பிள்ளைகளே, உங்களில் ஆர் இதற்குத் தாமாயிருக்கிறீர்கள். இந்தத் திருச்சபை என்னுந் தோட்டத்தில் நீங்கள் செய்யக்கூடிய ஊழியமென்னவென்று தெரியுமா? சிறுபிள்ளைகளை அதிகமாய் நேசிக்கிறவராகிய இரட்சகரிடம்போய், மற்றவர்களுக்காகப் பிரார்த்திக்கலாம். உங்களோடு படிக்கிறவர்களுடன் யேசுக்கிறிஸ்துவைக் குறித்தும், இரட்சிப்பைக்குறித்தும் பேசலாம். உங்களாலானமட்டும், ஓய்வுநாட்களிலும, மற்றும் வேளைகளிலும், உங்கள் இயல்புக்குத்தக்கதாக, ஏழைகளைப் படிப்பிக்கிறதற்குப் பணங்கொடுத்து உதவிசெய்யக்கூடும். இப்படியே பலவழியினாலும், நீங்கள் தேவனுக்கு ஊழியஞ்செய்யலாம். அப்போது உங்கள் பரமபிதா இம்மையிலும் உங்களை ஆசீர்வதிப்பார். மறுமையிலும் நித்தியாநித்திய பேரின்பத்தை அடைவீர்கள். ஆ! எவ்வளவு பாக்கியம். வேலைசெய்யக்கூடாத இரவு வருமுன, பகலாயிருக்கையிற் பிரயாசப்படுங்கள்.

## சிங்கமும் அடிமையும்.

உரோம இராயனின் மந்திரி தனது அடிமையுடன் ஆபிரிக்கா தேசத்துக்குப் போனான். மந்திரி யாதொரு நியாயமுமின்றி தனது அடிமையைக் குரூரமாக நடத்திவருகிறதினால் அடிமையானவன் இப்படிக்கொத்த குணத்தையுள்ள எசமானிடமிருந்து ஜீவிக்குங் காலம்விடுவதிலும் வனவாசமாய்ப் போய்ப் பட்டினிகிடந்து அல்லது துஷ்ட மிருகங்களாற் பீறண்டு இறந்துபோவது நல்லதென்றெண்ணி தருணம் வாய்த்தபொழுது ஓடித்தப்பிவிட்டான். காட்டுக்குட் சென்று தாகத்தினாலும் பசியினாலும் உஷ்ணத்தினாலும் ஆயாசமாய் நிழலைத் தேடிச்சென்று ஒரு இடமுங் கிட்டாமல் அலைந்து திரிகையில் ஒரு குகையைக் கண்டு அதிற் சென்று உட்கார்ந்தவுடனே பென்னம்பெரிய சிங்கமானது மூன்று காலை நிலத்தில் ஊன்றி ஒரு காலை உயர்த்திச் சீறிச் சினந்து ஆக்கிரமித்துக்கொண்டு குகைக்குட் புகுந்தது. உடனே அடிமை குகையில் ஒரு மூலையில் ஒதுங்கி மூர்ச்சித்துக்கிடந்தான். சிங்கமோ அவனுக்கு நேரேசென்று தனக்கு உதவிசெய்ய வேண்டுமென்றது போல தன் காலை உயர்த்திக்கொண்டு நின்றது. அடிமை அதை விளங்கிக்கொண்டு சிங்கத்தின் காலைப் பிடித்துப் பார்த்தான். அதின் கால் வீங்கிச் சீபாய்ந்துகொண்டிருந்தது. அதின்காலில் சிராய்த் துண்டு ஏறி இருந்ததாகக் கண்டு, உடனே சிராயை வெளியே இழுத்து சீழைப் பிதுக்கிவிட அதின் வருத்தம் ஆறினது. உடனே தன் காலை அடிமையின் கையில் வைத்தபடியே நித்திரையானது. அடிமையோ சிங்கம் விழித்தெழும்பும்பொழுது தன்னைத் துண்டுதுண்டாகக் கிழித்துப்போடுமென்று ஏக்கம்நிறைந்தவனாகவிருந்தான்.

உடனே சிங்கம் விழித்து தன் வருத்தம் விலகுவானதை உணர்ந்து நன்றியறிவான குணங்களையும் அடையாளங்களையும் அடிமைக்குக் காட்டினதால் அடிமையுமோ சிங்கத்துடன்கூடவிருப்பதுதான் தனது சலாக்கியமென்று சிந்தித்து அதுவுடன் கூட வசித்தான். இவன் தன்னுடன்கூடவிருப்பதைச் சிங்கங்கண்டு ஆகாரந் தேடும்படி புறப்பட்டு வேட்டையாடி சிக்கரமாகக் கொழுத்த இறைச்சித்துண்டைக் கொண்டுவந்து கொடுத்தது. அடிமை மூன்றுநாள் பசியினால் வருந்திக்கிடப்பதால் இறைச்சித்துண்டை வாங்கி வெயிலில் வாடப்போட்டுவிண்டு புசித்தான். மூன்று வருஷக் காலமாக அடிமை சிங்கத்துடன் வாசம்பண்ணி இவ்விதமாகச் சீவித்தான். சிங்கமும் ஒவ்வொருநாளும் உச்சித இறைச்சித் துண்டைபேகொடுக்கும்.

எவ்வளவு காலத்துக்கு இவ்விதமாகக் காலம் விடலாமென்று அடிமை எண்ணி தப்பி ஊருக்குட்செல்லவேண்டுமென்று சிந்தித்துத் தனது எசமானும் உரோமைக்குப் போய்விடுவானென்று நினைத்து தன்னை ஒருவரும் கண்டுபிடிக்கமாட்டார்களென்று நிச்சயித்துக்கொண்டு சிங்கம் வேட்டையாடப்போய்விட இவனும் புறப்பட்டான். இவன் வனத்தைத் தாண்டி ஊரிற் சேர்ந்தவுடன் உரோமசேவகர் இவனைக் கண்டுபிடித்து விலங்கிட்டு உரோமாவுக்குக் கொண்டுபோய் மந்திரிவசம் ஒப்புவித்தார்கள். மந்திரியுஞ் சிலகாலஞ் சென்றதின்மேல் இவனைத் துஷ்டமிருகங்களின் முன்போடும்படி கற்பித்தான். இம்மிருகங்களுக்குள் ஒரு பெரிய சிங்கமுமிருந்தது. இவன் கையில் ஒரு கரிகைமாத்திரமிருந்தது. சுற்றிலும் நின்றுபார்த்த சனங்கள் ஆச்சரியப்படும்பொருட்டாக சிங்கம் அவனிற் கருச்சித்துப்பாயாமல் மெதுவான நடையாகச் சென்று பட்சங்காட்டி அவனை நக்கி நாய் வாலை ஆட்டுவதுபோல தன் வாலை ஆட்டிற்று. அடிமையுமோ காட்டில் தன்னுடன் கூடவசித்த சிங்கமென்று மட்டிட்டு அதைத் தடவி தனது பட்சத்தைக் காட்டினான். சிங்கமும் இவனும் நண்பராகவிருப்பது என்னகாரியமென்று பலரும் வினவி ஆச்சரியப்பட்டார்கள். இக்காட்சியைப் பார்த்துக்கொண்டு நின்ற கலிகுலாவென்னும் இராயன் அடிமையை அழைப்பித்துக் காரியம் என்னவென்று விசாரித்தான். அடிமையும் காரியத்தின் உண்மையை வெளிப்படுத்தினான். இராயனும் அவன் குற்றத்தை மன்னித்து சிங்கத்தையும் வெகுமதியாகக் கொடுத்தான். உடனே அடிமையும் மனமகிழ்ச்சியுள்ளவனாக சிங்கத்தையும் ஒரு சிறுகயிற்றில் கட்டிக்கொண்டு பலவிடத்திலுஞ் சென்று வெகுமதிகளையும் உபகாரங்களையும் வாங்கினான்.

பிள்ளைகளே, நீங்கள் கற்றுக்கொள்ளவேண்டிய படிப்பினைகள் இந்தச் சரித்திரத்திலுண்டு. உங்கள் சத்துருக்கள் எதிரிகள் வருத்தமுள்ளவர்களாக இருக்குங் காலத்தில் நீங்கள் அவர்களுக்குப் பயப்படாமல் செய்யவேண்டிய நன்மைகளைச் செய்வீர்களாகில் அது உங்களுக்கு ஆசீர்வாதமாகமுடியும். உன் சத்துருவுக்குப்பசியுண்டானால்போசனங்கொடுவென்றும், தாகமானால் அவன் தாகத்தைத் தீரென்றும், எங்கள் இரட்சகர் சொல்வதைக் கவனியுங்கள். நன்மையினால் தீமையைச் செயிப்பாயாக என்றுஞ் சொல்லப்படுகிறது. இப்படிப் பிள்ளைகளாகிய நீங்கள் செய்வீர்களாகில் உங்கள் எதிரிகளினால் உண்டாகும் தீங்குமார்க்கமென்னும் மரம் இத்தேசத்தாரால் அறியப்படுமே.

## பூமிசாஸ்திரக் கேள்வி.

௧. சீபேரியாவின் எல்லைகளென்ன?

௨. இத்தேசத்தின் பிரதான ஆறுகள் என்ன?

௩. இதின் தலைநகரம் என்ன? அவர்கள் என்னமார்க்கம்?

௪. சீபேரியாவிலுள்ள பிரதான பொருள்கள் என்ன? பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, மிருகங்களின் தோல் என்பவைகளே.

௫. இவர்கள் எவ்வித சனங்கள்? வேட்டையாடித்திரியும் காட்டுச்சனங்கள்?

௬. யாப்பான் தீவு எங்கே?

௭. இதின் இராசதானி என்ன?

௮. இத்தீவார் என்னமார்க்கம்?

௯. யாப்பானுடன் இணைந்த தீவுகள் என்ன?

௰. பிறதேசத்தார் அவ்விடத்திற்சென்றுவியாபாரம்நடத்த இடம்பெற்ருர்களா?

8s-Double.
"Ye angels who stand round the throne &c."

## மோட்சானுராகம்.

௧. பிதா வீற்றிருக்கும் மேல்வீட்டில்
அநேக ஸ்தலங்கள் உண்டாம்,
என் மீட்பர் உட்பட்ட பரத்தில்
எனக்கும் ஓரிடம் உண்டாம்.
என் நேசர், என் செல்வர், என் தேவன்,
இப்பூமியிற் கூட நின்றால்
எத்துன்பம், எவ்வாதை, எத்தீயன்
நேரிட்டும், வெல்வேன் அவரால்.

௨. சிலுவையின் கொடியை ஏற்றி,
சர்வாயுத வர்க்கம் கொண்டே,
போராடி, நல்யுத்தத்தில் வெற்றி
எனக்குக் கொடுப்பார் அன்றே.
கொடுக்க,—இச்சடம், இத்துன்பம்
விட்டேறி, அச்சாயல் கொள்வேன்,
நல் ஓசை நாதிக்கும் சங்கீதம்
நான் பாடி, களிப்படைவேன்.

௩. விண்ணோர் வாசம்பண்ணும் மேல்வீட்டில்
நான் சென்று, வெள்ளங்கி கொள்வேன்
பேரின்பர் அடைந்த மா வாழ்வில்
ஆனந்த சந்தோஷங் கொள்வேன்.
சிங்காசனம் மேல்வீற்றிருக்கும்
என் யேசுவின் மேன்மை காண்பேன்
அம்மூப்பர், அத்தூதர், துதிக்கும்
களிப்பிலே பங்கடைவேன்.

## சத்தியவேதக்கேள்வி.

௬ம் பாடம்.

எகிப்துக்குப்போதலும் ஏரோதின்கொடுமையும். மத். ௨: ௰௩-௰௮. ௰௯-௨௩.

௧. சாஸ்திரிகள் யேசுவினிடஞ் செல்வதற்கு வழிகாட்டினதென்ன?

௨. சாஸ்திரிகள் காணிக்கையாக என்னகொடுத்தார்கள்?

௩. சாஸ்திரிகள் போனபின் யோசேப்புக்குக் காணப்பட்டதார்?

௪. தேவதூதன் யோசேப்புக்கு என்ன சொன்னான்?

௫. ஏன் எகிப்துக்குப் போனார்கள்?

௬. குற்றமற்ற சிறுபிள்ளையை ஒரு இராசா ஏன் கொல்ல வேண்டியது?

௭. பெத்லகேமிலிருந்து எகிப்து எவ்வளவு தூரம்? ஏறக்குறைய ௧௱ மைல்.

௮. எவ்வளவுகாலம் எகிப்திலிருந்தார்கள்?

௯. சாஸ்திரிகள் ஏரோதினிடம் திரும்பி வந்தார்களா?

௰. அவன் வஞ்சிக்கப்பட்டதினால் என்ன செய்தான்?

௰௧. ஏன் இரண்டுவயசிற்குட்பட்ட பிள்ளைகளைக் கொல்லுவித்தான்?

௰௨. ஏரோது எவ்விதமாக மரித்தான்? கொஞ்சக்காலத்திற்குள் கொடியரோகத்தினால் மரித்தான்?

௰௩. ஏரோது மரித்ததின்மேல் யோசேப்புக்குக் காணப்பட்டதார்?

௰௪. தேவதூதன் சொல்லியபடி யோசேப்புச் செய்தானா?

௰௫. ஏரோதின்பின் இராசாவாக இருந்ததார்?

௰௬. இவன் எப்படிக்கொத்தவன்?

௰௭. பெத்லகேமுக்குப்போகப் பயந்ததினால் பிள்ளையுந்தாயும் யோசேப்பும் எங்கே போனார்கள்?

## வாய்க்கொழுப்புச் சீலையால் வடிகிறது.

ஓ! என் அருமைப் பாலியரே,

மேற்குறித்த முகவுரையை சமயாசமயங்களில் அனேகர் எடுத்துப் பேசுவதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள், அவ்வாக்கியமுண்டுபட்ட இயல்பை அறியீர்களென்று நம்புகிறேன். எவ்வாறெனில்.

விவேகசூனியனாகிய ஒரு யாபாரி சில சரக்குவாங்கும்பொருட்டுத் தன் ஊரை விட்டு அயலூருக்குப் பிரயாணமாகி பொருளன்றி வழியில் பசிக்காதாரமாய் ஒன்றுங் கொண்டுபோகாமற் சென்றான். அம் மிலேச்சன் நெடுந்தூரம் நடந்ததால் பசியுந் தாகமும் மேற்கொண்டு எப்போது சேருவோம் எப்போது சேருவோமென்றேங்கிச் செல்லுகையில், ஒரு சிறு வீடு அகப்பட்டது. அதைக்கண்டு மகா ஆநந்தங்கொண்டு குடிசைக்குட் சென்றான். அவ்விடத்தில் தானியங்களை வெயிலில் உலரப்போட்டுக் கொண்டிருந்த ஒரு கிழவியைக் கண்டு அம்மா எனக்கு மிகப் பசியாகவிருக்கிறது தயவுசெய்து ஏதேனும் ஆகாரமீந்தால் பொருள் தருகிறேனென்று கெஞ்சி வேண்டினான். அக் கிழவி இவ் வியாபாரிக்குண்டுபட்டிருக்கும் நிலைமையைக் கண்டு இரங்கி, அப்பா இப்போது ஆகாரத்துக்கொன்றுமில்லை, சற்றுஇவ்விடம்உழுக்கார்ந்திருந்தால் ஒரு கொடியிற் பரிபூரணமாக சமைத்துத் தருகிறேன் என்றான். அதற்கு அவன் சம்மதித்திருக்கும்போது கிழவி விரைவில் சமைக்கும்போது அடுப்பெரியாதிருந்தது. அதைக் கண்டு துக்கத்துடன் ஊது குழலால் ஊதினான். ஆ! பாலியரே அச்சமையத்தில் கிழவிக்கு வாய்வுபறிந்தது. அதை நன்றிகெட்ட மூதேவியாகிய வியாபாரி என் பசியைக் கண்டு இரட்டைக் குழல்வைத்து ஊதுகிறாளென்று நகைத்தான். இதனால் கிழவிக்குச் சினமிகுந்து அடா நன்றிகெட்ட மூடா உனக்குப் பிரயாசப்படுவதிலும் அறிவற்ற மிருகங்களுக்குப் பிரயாசப்பட்டால் சிலாக்கியமடையலாமென்று சீறி வெந்தும் வேகாதிருந்த அமுதை எறிந்துவிட முயன்றான். அதைக் கண்டு மிலேச்சனாகிய வியாபாரி விசனமுற்று ஓ! தாயே தரையில் எறியாதே இந்தச் சீலையிற் போடென்று கெஞ்சி வேண்டினான். அதற்குக் கிழவி இரங்கி மிலேச்சன் விருப்பத்தின்படிக்குப் போட்டான். அதிலிருந்து நீர் வடியும்படியாக கையிலெடுத்துக்கொண்டு செல்லும்போது தனக்கிசைந்த மித்திரனொருவனைச் சந்திக்க அவன் நீர் வடியும்மூட்டையைக் கண்டு ஓ! மித்திரனே இதென்ன மூட்டையென்று கேட்க, அவ் வெட்கக்கேட்டைக்கேட்பானேன், வாய்க்கொழுப்புச் சீலையால் வடிகிறதென்றானாம்.

ஓ! பாலியரே, இக் கதையால் நீங்கள் கற்றுக்கொள்ளுவதென்ன? எப்பேர்க்கொத்தவர்க்கும் வாயிடக்காகாதென்பதல்லவோ? செல்வப்பொருளிற் சிறந்திருந்தபோதிலும் அக்கிரமச் சொல்லுக்கும் நடத்தைக்கும் மேலோர் கீழ்ப்படிவார்களோ? ஒருகாலமுமில்லை. எக்காலமும் எவ்விடமும் தத்தம் இயல்புக்குத்தக்கபடி பேச்சும் நடையுமிருந்தால் மேன்மையடையலாம் அவ்வாறில்லாவிடில் யாபாரி பட்ட பாட்டினும் கேடாய் வந்து முடியுமல்லவோ? அவ்வாறாகாமற் காப்பதே விவேகம்!

இப்படிக்கு, சிங்கப்பூர்ச் சார்க்கோக்ரோட்டாமென்னும் பாலியர்ப்பிரியன்.

நாராயணசாமிநாயக்கன்.

## எவ்விதப் பேன்னி.

தேவனுடைய இராச்சிய விருத்திக்காக அநேக பிள்ளைகள் தங்கள் பென்னிகளைக் கொடுக்கிறார்கள். அவர்கள் இவ்வகையாகக் கொடுப்பது நல்லது. ஆனால் கொடுப்பது தகரப்பென்னிகளா? செம்புப்பென்னிகளா? இரும்புப்பென்னிகளா? வெள்ளிப்பென்னிகளா? அல்லது பொற்பென்னிகளா? தகரப்பென்னிபொற்பென்னியுண்டா? இல்லை நீங்கள் எவ்வகைக் குணத்துடன் கொடுக்கிறீர்களோ அவ்வகையாகவே தேவ சமுகத்தில் அந்தந்த உலோகங்களாகவிருக்கும். எழுந்தமானமாக யாதொரு சிந்தனையின்றிக் கொடுப்பதுவே தகரப்பென்னி. தருமப் பெட்டியில் கலகலவென்று ஒலிக்கும்படிக்கே கொடுக்கிறார்கள். மீனுனது தனது வாயிலுள்ள பணத்தை யாதொரு எண்ணமற்று பேதருவிடங் கொடுத்ததுபோற் கொடுக்கிறார்கள். மறுபேர் தாங்கள் கொடுக்கிறதென்பதை அறியும்படி பெருமைச் சிந்தையுடன் கொடுக்கிறவர்களே செம்புப்பென்னி. தாழ்ந்த சிந்தையுடன் கொடுப்பவர்களையே யேசு நேசிக்கிறார். நமது இடதுகை செய்வதை வலது கை அறியாதிருக்கக்கடவது. மறுபேருங் கொடுக்கிறார்கள், நாமுங் கொடுக்கவேண்டுமென்ற குணத்துடன் கொடுப்பதே இரும்புப்பென்னி. தாங்கள் கொடுக்கவேணுமென்ற சிந்தையல்ல, மறுபேர் கொடுப்பதினாற் கொடுப்பதைத் தேவன் அங்கிகரியார்.

வெள்ளிப் பென்னி கொடுக்கிறதாரெனில், இரக்கத்தினாற் கொடுப்பவர்களே. இது நல்லது. கல்லையும் மண்ணையும் மரக்குற்றிகளையும் வணங்கும் அஞ்ஞானிகளின் மேல் நாம் இரங்கப்படாதா? தெருவழிகளில் அலைந்து திரியும் பிள்ளைகள்மேல் இரங்கப்படாதா? மோட்சமார்க்கத்தைஅறியாதவர்கள்பேரிலிரங்கப்படாதா? ஆம் இரங்கவேண்டும். ஆனாற் பொற்பென்னி அதி உத்தமம். ஏனெனில் தேவனை நேசிப்பதால் நாம் கொடாமலிருக்கக்கூடாது. கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது. அந்த அன்பு எங்களைக் கொடுக்கச்செய்கிறது. அது யேசுவையும் அவர் மீட்பையுங் காட்டுகிறது. இவ்வகையாக நாம் கொடுக்கும் பென்னி என்னவென்றறியலாம்.

நாம் கொடுக்கும் பென்னி பொற்பென்னியோ எனறறிய மூன்று வழியுண்டு. முதலாவது நாம் வருந்தித் தேடின பென்னியாகவிருக்கட்டும். நாம் வருந்தி உழையாத பென்னி கொடுக்கவேண்டியதில்லை. அதை இலவசமாகப் பெற்றால் இலகுவாக மறந்துவிடுவீர்கள். எல்லாக் குழந்தைகளும் உழைப்பதற்கு வழியுண்டு. மனமுண்டானால் இடமுமுண்டு. இரண்டாவது ஒழுங்காகக்கொடுக்கவேண்டும். கிடைத்தகாலங்களிற் கொடுப்பதல்ல. கொடுப்பதை மறந்துவிட்டேனென்று சொல்வதல்ல. சூரியன் தனது நியமந் தவறாமல் உதிப்பது போல இதுவும் இருக்கவேண்டும். மூன்றாவது செபத்துடன் கொடுக்கவேண்டும், கொடுக்க முன்னும் கொடுத்தபின்னும் செபமே காவலாக நிற்கவேண்டும். பொற்பென்னியைக் கொடுத்தவர்கள் தேவன் ஆசீர்வதிக்கும்படி கேட்பார்கள். என் பிள்ளையே நீ கொடுக்கும் பென்னி எவ்விதப் பென்னி என்று சிந்தித்துப்பார்.

## தோல்லையை அகற்ற மருந்து.

ஆருக்காகுதல் நன்மை செய்யத் தேடு. வெளியே போய்த் துன்பவாளிகளையுந் தரித்திரரையுஞ் சந்தி. அவர்கள் குறைவுகளை விசாரித்து உன்னாலானமட்டும் உதவு. அந்தரித்தவர்களையும் இடைஞ்சற்படுவோரையுங் கண்டு தேவபத்தியால் வரும் மெய் ஆறுதலைச் சொல்லு. துக்கத்திலும் கவலையிலும் அமிழ்ந்திருக்கும் நெஞ்சுக்கு இதுவே நன்மருந்து.

பிள்ளைகளே, இம்மருந்தைச் செய்துபாருங்கள். அப்பொழுது உங்கள் இருதயம் சொல்லிமுடியாத சந்தோஷத்தை நிசமாக அநுபவிக்கும்.

## இளமையிற் கல்வி.

ஒருதினத்திலொருமனுஷன் உம்முடையமகன் உலகிலோர் பெரியவராகும்படி என்ன உபாயஞ்செய்தீரென்று உவாஷிந்தனுடைய மாதாவிடத்தில் வினாவ, கீழமைதல், முயற்சி, உண்மைபேசுதலென்னும்மூன்றுதொழில்களையும்இளம்பிராயத்திற்படிப்பித்துவைத்தேனென்றான்.

இதை வாசிக்குங் கிறிஸ்த மாதாக்களே, உங்கள் பிள்ளைகளுக்கு என்ன படிப்பித்திருக்கிறீர்கள். மேற்குறித்த அம்மா படிப்பித்தகல்வியா அல்லதுகெட்டபழக்கங்களையா? நினையுங்கள். ஆனாற்சிலபிள்ளைகள் அஞ்ஞானப் பிள்ளைகளைப்பார்க்கத் தூஷணம்பேச முந்திக்கொள்வதைக் காணும்போது மிகத் துன்பமாயிருக்கின்றது.

Printed and Published for the Youth's Christian Association, by N. Strong, at the Press of Ripley & Strong, Manepy, Jaffna.